




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 333 | 26.05.2026 | TUESDAY | VAIKASI : 12 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 333 | 26.05.2026 | செவ்வாய்கிழமை | வைகாசி : 12 | விலை : ரூ.5/-


## "தூத்துக்குடி பள்ளி மாணவி வழக்கில்

# "மிகத் துரிதமாக நீதி..!"

## முதல்வர் விஜய் வரவேற்பு



சென்னை: மே.26-

தூத்துக்குடி பள்ளி மாணவி பாலியல் படுகொலை வழக்கில் தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதற்கு முதல்வர் விஜய் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் விஜய் தனது எக்ஸ் தளத்தில், "தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் 12 ஆம் வகுப்பு படித்து வந்த மாணவி கடந்த மார்ச் மாதம் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு தூத்துக்குடி மாவட்ட போக்சோ நீதிமன்றம் இன்று இரட்டை தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கில் 71 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டு, துரிதமாக விசாரிக்கப்பட்டு, தர்மமுனீஸ்வரன் என்ற குற்றவாளிக்கு, பாலியல் குற்றம் மற்றும் கொலைக் குற்றத்திற்காக இரட்டை தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இக்கொடூர சம்பவம் நடைபெற்ற மூன்று மாதங்களுக்குள் மிகத் துரிதமாக நீதி வழங்கப்பட்டுள்ளது, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பினை உறுதி செய்திடும் அரசின் நடவடிக்கைகளுக்கு உற்ற துணையாக வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பு வரவேற்கத்தக்கது" இவ்வாறு அவர் பதி விட்டுள்ளார்.



## அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேர் ராஜினாமாவுக்குப் பின் தவெகவில் ஐக்கியம்

சென்னை: மே.26-

வேலுமணி தரப்புக்கு ஆதரவாக இருந்த அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா ஆகிய மூவரும் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முன்னிலையில் தவெகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுகவின் உட்கட்சிப் பூசல் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அக்கட்சியின் எம்எல்ஏக்கள் மூன்று பேர் தங்களது எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்து, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேலுமணி தரப்புக்கு ஆதரவாக இருந்து வந்த மதுராந்தகம் எம்எல்ஏ மரகதம் குமரவேல், பெருந்துறை எம்எல்ஏ ஜெயக்குமார், தாராபுரம் எம்எல்ஏ சத்யபாமா ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர். சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை சந்தித்து 3 எம்எல்ஏக்களும் ராஜினாமா கடிதங்களை வழங்கினர்.

ஆய்வு செய்து ராஜினாமா ஏற்பு குறித்து அறிவிக்கப்படும் என சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

ராஜினாமா கடிதத்தை அளித்த கையோடு, மூவரும் பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுக ஏற்கெனவே இரண்டு அணிகளாக பிரிந்து கிடக்கும் நிலையில், வேலுமணி அணியைச் சேர்ந்தவர்கள் அடுத்தடுத்து கட்சியை விட்டு வெளியேறுவது, அக்கட்சியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

காலியாகும் தொகுதிகள்:

அதிமுக எம்எல்ஏக்கள் 3 பேர் ராஜினாமா செய்துள்ள நிலையில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 230 ஆக குறையும். ஏற்கெனவே திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை முதல்வர் விஜய் ராஜினாமா செய்த நிலையில், இந்த ராஜினாமாக்கள் ஏற்கப்பட்டால் 4 தொகுதிகள் காலியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தூத்துக்குடி பள்ளி மாணவி பாலியல் படுகொலை வழக்கில் தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை



தூத்துக்குடி: மே.26-

குளத்தூர் அருகே வேடநத்தம் பள்ளி மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு தண்டனை விதித்து தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் அருகே வேடநத்தத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியின் 17 வயது மகள், அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். கடந்த மார்ச் 10ம் தேதி இரவு வீட்டை விட்டு வெளியே சென்ற மாணவி மீண்டும் வீடு திரும்பவில்லை. மறுநாள் (மார்ச் 11) மாலை கிராமத்துக்கு அருகே காட்டுப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். இதையடுத்து மாணவியை கொலை செய்தவர்களை கைது செய்ய வலியுறுத்தி, கிராம மக்கள் உட்பட பல்வேறு அமைப்புகள், கட்சியினர் மறியல் போராட்டம் நடத்தினர்.

போலீஸார் 10 தனிப்படைகள் அமைத்து தேடுதல் பணியில் ஈடுபட்டனர். இதில், ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த முனியசாமி மகன் மாவீரன் என்ற தர்ம முனீஸ்வரன் (37) என்பவரை மார்ச் 19ம் தேதி பிடித்து விசாரணை நடத்தினர். இதில் அவர்தான் மாணவியை கொலை செய்தது தெரிய வந்தது.

இது தொடர்பான வழக்கு தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கு விசாரணை முடிவடைந்த நிலையில் இன்று (மே 25) தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக மதுரை மத்திய சிறையிலிருந்து பாதுகாப்புடன் தர்ம முனீஸ்வரனை போலீஸார் அழைத்து வந்து தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தினர்.

நேற்று காலை 11 மணியளவில் இந்த வழக்கில் தர்ம முனீஸ்வரன் குற்றவாளி என்று நீதிபதி பிரீத்தா தீர்ப்பளித்தார். அவருக்கு விதிக்கப்படும் தண்டனை விவரங்களை பிற்பகல் 12.45 மணிக்கு அறிவிப்பதாக தெரிவித்திருந்தார்.

அதன்படி மீண்டும் பிற்பகல் 12.45 மணிக்கு நீதிமன்றம் தொடங்கியதும் நீதிபதி பிரீத்தா தண்டனை விவரங்களை வாசித்தார். அவர் கூறுகையில், "குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு 17 வயதில் மகள் உள்ளார். அவருடைய மனைவியும், மகளும் அவரை பிரிந்து வாழ்கின்றனர். மகள் வயது பிள்ளையை பார்க்கும் போது அவளை பாதுகாக்க வேண்டும் என்ற மனது குற்றவாளி தர்மமுனீஸ்வரனுக்கு இல்லை. அவளை பாதுகாக்கத் தவறி மிருகத்தனமாக நடந்துள்ளார்.

இந்தக் குற்றத்தை செய்யும் போது அவருக்கு மகள் நினைவு வராதது, வேதனையளிக்கிறது. குற்றவாளியை நம்பி அவருடைய தாய் மட்டும் அவருடன் உள்ளார். குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்குவது முறையாக இருக்காது. அதனால் குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு பாலியல் வன்கொடுமை, கொலை ஆகியவற்றுக்கு சேர்த்து இரட்டை தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறேன்.

தண்டனையை குறைக்க ஏதாவது ஒரு காரணம் இருக்குமா என்று பார்த்தேன். ஆனால் இல்லை. மேலும் இரட்டை தூக்கு தண்டனையோடு மேலும் ஓராண்டு சிறை தண்டனையையும் சேர்த்து விதிக்கிறேன். இதில் அவர் ஏற்கெனவே அனுபவித்த சிறைத் தண்டனை காலத்தை கழித்துக் கொள்ளலாம்," என்றார்.

### வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு

இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான சிறப்பு வழக்கறிஞர் எல்லம்மாள் கூறுகையில், "இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட தர்ம முனீஸ்வரன் பிரிவு 104 பி.என்.எஸ். சட்டத்தின்படி தூக்கு தண்டனையும், பிரிவு 6 போக்சோ சட்டத்தின்படி தூக்கு தண்டனையும், பிரிவு 127(2) பி.என்.எஸ். சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பு கூறியுள்ளார். இது வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பாகும்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மாணவியின் பிரேத பரிசோதனைபோது சேகரிக்கப்பட்ட தடயங்களும், குற்றம்சாட்டப்பட்டவரின் ரத்த மாதிரிகளும் உள்ள டி.என்.ஏக்கள் ஒரே மாதிரியாக இருந்ததையடுத்து, அந்த அறிக்கையின் அடிப்படையில் அவர் மீதான குற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் இருந்தே இந்த வழக்கில் காவல் துறையினர் துரிதமாக செயல்பட்டதால் தான் 10 நாட்களுக்குள் சூழ்நிலை சாட்சியங்கள், அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்," என்றார்.

### 76 நாளில் தீர்ப்பு

தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை தொடங்கிய 76வது நாளில் இரட்டை தூக்கு தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த மார்ச் 10ம் தேதி மாணவி கொலை செய்யப்பட்டார். குற்றப்பத்திரிகை விரைவாக தாக்கல் செய்யப்பட்டு ஏப்ரலில் இந்த வழக்கின் விசாரணை தொடங்கியது. மே 21ம் தேதி விசாரணை நிறைவடைந்தது. நேற்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

### ஏற்கெனவே ஆயுள் தண்டனை

கடந்த 2020ம் ஆண்டு பிப்.2ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே கீழஈரால் பகுதியில் பாப்பா (65) என்ற மூதாட்டியிடம் நகைகளை திருடி பாலியல் துன்புறுத்தல் செய்து கொலை செய்த போலீஸார் தர்ம முனீஸ்வரனை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் நடந்தது. இதில், கடந்த ஆண்டு தர்ம முனீஸ்வரனுக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு, அவருக்கு கடந்த ஆண்டு டிச.18ல் ஜாமீன் கிடைத்துள்ளது. அதனை தொடர்ந்து, உயர் நீதிமன்ற உத்தரவுப்படி டிச.24ம் தேதியில் இருந்து தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் கையெழுத்திட்டு வந்துள்ளார்.

இதற்காக அவர் சாயல்குடியில் இருந்து வேடநத்தம் வழியாக குறுக்குச்சாலை வழியாகவே தூத்துக்குடி வந்து சென்ற போது தான், வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பள்ளி மாணவியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துள்ளார் என்பது போலீஸார் விசாரணையில் தெரிய வந்தது.



## சனாதனம் ஏற்றத்தாழ்வு கற்பிப்பதில்லை! திராவிட பிலாசபி குறித்துப் பழனியில் செங்கோல் ஆதீனம் அதிரடிப் பேச்சு

பழனி, மே.26-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள வன்னி விநாயகர் கோயிலில், கோயில் நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு பிராமண ஸமாஜம் இணைந்து நடத்தும் உலக நன்மைக்கான குருபெயர்ச்சி மகா சங்கல்ப நிகழ்வு மற்றும் யாக வழிபாடுகள் விமரிசையாக நடைபெற்றன. சுந்தரேசர் குருக்கள் தலைமையில் "ஜீவஸபர்யா ஹோமம்" நடைபெற்ற இந்த நிகழ்வில், தூத்துக்குடி செங்கோல் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சத்தியஞான தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், ஆகம வல்லுநர் குழு தலைவர் பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் மற்றும் தமிழ்நாடு பிராமண சமாஜ மாநில தலைவர் ஹரிஹரமுத்து உள்ளிட்ட ஆன்மீகப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றிய தூத்துக்குடி செங்கோல் ஆதீனம், தற்போதைய அரசியல் மற்றும் தத்துவச் சூழல் குறித்து அதிரடியாகப் பேசினார். "சனாதன தர்மம் என்பது யாருக்கும் எவ்வித ஏற்றத்தாழ்வுகளையும் கற்பிப்பது கிடையாது. திராவிடம் என்பது பூகோள ரீதியாகக் குறிப்பிடப்பட்ட ஒரு பகுதி, அவ்வளவுதான். அது கர்நாடகம், கேரளா வரை சொல்லப்பட்ட பூகோள எல்லை. ஆனால், அதை இன்று ஒரு பிலாசபியாக (தத்துவமாக) மாற்றிக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். 'இது திராவிட நாடு' என்று சொல்லி நம்மளையெல்லாம் குழப்புகிறார்கள். இதை நாங்கள்தான் துணிச்சலாகச் சொல்ல முடியும்" என்று பேசினார்.

மேலும், சிவாச்சாரியார்கள் யாரும் தங்கள் குடும்பத்திற்காகச் சுயநலமாக யாகம் வளர்ப்பதில்லை என்றும், இறைவனை நம்பும் அனைத்து இந்துக்களின் நன்மைக்காகவும் உலக மக்கள் நல்வாழ்விற்காகவும் இந்த யாகங்கள் தொடர்ந்து நடக்கும் என்றும் செங்கோல் ஆதீனம் தனது உரையில் நிறைவு செய்தார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

## "15 நாட்களில் 25 கொலைகள், 19 பாலியல் குற்றங்கள்... என்ன செய்யப் போகிறீர்கள் முதல்வரே?" உதயநிதி



சென்னை, மே.26-
"தமிழ்நாட்டில் கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் நடந்துள்ளது. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்க, முதல்வர் ஆக்கப்பூர்வமாக என்ன செய்ய போகிறார் என்ற கேள்விக்கு அவர் நேரடியாக பதில் சொல்லி ஆக வேண்டும்" என சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழகத்தில் கடந்த 15 நாட்களில் 25 கொலைகள், 4 இரட்டைக் கொலைகள், 19 பாலியல் குற்றங்கள் என செய்திகளில் வந்த சம்பவங்கள் மட்டுமே இவை. மாற்றம், மாற்றம் என்று சொன்னவர்களின் ஆட்சியில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மாறி இருப்பதற்கு இந்த சம்பவங்களே சாட்சி.

கோவை சூலூர் சிறுமிக்கு நடந்த கொடுமையின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் விழுப்புரம் மாவட்டத்தில் மற்றொரு சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை நடந்திருக்கிறது. சூலூர் சிறுமியின் தாய்க்குச் சொல்லாமல் அவசரகதியில் உடல் எரிக்கப்பட்டிருக்கிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே சிறுவன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

மேலும், கோவையில் ஓர் இளம்பெண்ணின் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டு இருக்கிறது. முதல்வரின் சொந்த தொகுதியான பெரம்பூரில் போதைக் கும்பல் ஒன்று 13 வாகனங்களின் கண்ணாடிகளை உடைத்து அட்டூழியம் செய்துள்ளது. முதல்வரே, இது தமிழ்நாடா, உத்தரப் பிரதேசமா?

எங்கே போனது உங்க சிங்கப்பெண் அதிரடிப் படை? தேர்தலுக்கு முன்பு வீர வசனங்களை பேசிய முதல்வர் இப்போது ஏன் வாய் திறக்க மறுக்கிறார்? அதிகரிக்கும் குற்றச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சத்தில் தவிக்கும் போது, இன்று காலை கண்துடைப்புக்காக காவல் துறை அதிகாரிகள் கூட்டத்தை நடத்தி பொத்தாம் பொதுவாக அறிக்கை விடுவதை ஏற்க முடியாது.

நிலைமையின் தீவிரத்தை முதலில் அரசு உணர வேண்டும். பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை தடுக்க, முதல்வர் ஆக்கப்பூர்வமாக என்ன செய்யப் போகிறார் என்ற தமிழ்நாட்டின் கேள்விக்கு அவர் நேரடியாக பதில் சொல்லி ஆக வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## கோவை, திருப்பூர் விசைத்தறியாளர்களுக்கு இழுத்தடிக்கப்படும் கூலி உயர்வு



கோவை, மே.26-
பல ஆண்டு காலமாக இழுத்தடிக்கப்படும் கூலி உயர்வு விவகாரத்தால், விசைத்தறியாளர்கள் சட்டப் பாதுகாப்புடன் ஒப்பந்த கூலி உயர்வை அமல்படுத்த வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் விசைத்தறி தொழிலை நம்பி, சுமார் 4 லட்சம் குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றன.

1990ம் ஆண்டு முதல் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜவுளி உற்பத்தியாளர்கள் கூலி ஒப்பந்தம் செய்து வந்தனர். ஆனால், தற்போது ஜவுளி உற்பத்தியாளர்களிடம் உரிய கூலி வழங்கக் கோரி விசைத்தறி உரிமையாளர்கள் போராடும் நிலைமை உள்ளது.

இதுகுறித்து கோவை, திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர் சங்கத் தலைவர் பூபதி கூறியதாவது: கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 90 சதவீதம் சாதா விசைத்தறிகள் மூலம் கூலி அடிப்படையில் நெசவு செய்து வருகிறோம். ஜவுளி உற்பத்தியாளர் களிடம் இருந்து பாவு நூல் பெற்று, கிரே காடா துணிகள் உற்பத்தி செய்கிறோம்.

3 ஆண்டுகளுக்கு ஒருமுறை விலைவாசி உயர்வு, தொழிலாளர்கள் கூலி உயர்வு, மின் கட்டண உயர்வுக்கு ஏற்ப புதிய கூலி உயர்வை ஜவுளி உற்பத்தியாளர்கள், விசைத்தறியாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் ஏற்படுத்தி வருகிறோம். ஆனாலும், கடந்த 2011ம் ஆண்டுக்கு பிறகு எங்களுக்கு உரிய கூலி கிடைப்பதில்லை.

ஒப்பந்தப்படி கூலி உயர்த்தப்பட்டாலும், மார்க்கெட் நிலைமை சரியில்லை எனக் கூறி, பழைய கூலியே திரும்பத் திரும்ப வழங்கப்படுகிறது. கடந்த 14 ஆண்டுகளாக உரிய கூலிக்கு போராடி வருகிறோம். ஒரு மீட்டர் துணி நெய்வதற்கு ரூ.4 முதல் ரூ.6 வரை ரகங்களுக்கு ஏற்ப விசைத்தறியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

ஆனால் இந்த கூலியில் மீட்டருக்கு 25 பைசா முதல் 50 பைசா வரை குறைத்து வழங்குவதால், பல லட்சம் மீட்டர் துணி உற்பத்தியில் ஈடுபடும் விசைத்தறியாளர்களின் வருவாய் கடுமையாக பாதிக்கப்படுகிறது.

எனவே, உரிய கூலி உயர்வை ஜவுளி உற்பத்தியாளர்களிடம் இருந்து மாநில அரசு, மாவட்ட நிர்வாகங்கள் பெற்றுத்தந்தால் மட்டுமே இந்த தொழிலின் எதிர்காலம் பாதுகாக்கப்படும். ஜவுளி உற்பத்தியாளர்கள் நெசவு கூலியை குறைத்து வழங்கும்போது, அதன் முழு சுமையையும் விசைத்தறியாளர்களே ஏற்கும் நிலை உள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 20ம் தேதி கோவை, திருப்பூர் மாவட்ட ஆட்சியர்களால் அறிவிக்கப்பட்ட நெசவுக்கூலி ஒப்பந்தத்தை அமல்படுத்துவதில் ஜவுளி உற்பத்தியாளர்கள் சில இடங்களில் மறுத்து வருகின்றனர். சட்டப் பாதுகாப்புடன் ஒப்பந்தக் கூலியை அமல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விசைத்தறியாளர்கள் கூறும்போது, "தொழிலாளர்களின் சம்பள உயர்வு, உதிரி பாகங்கள் விலை உயர்வு, வாடகை உயர்வு, மின் கட்டணம், தொழிலாளர்களின் வீட்டு வாடகை உயர்வு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் விசைத்தறி தொழில் முடங்கியுள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், வேறு தொழிலுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளனர். உரிய கூலியை பெற்றுத்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

## பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்: முதல்வர் விஜய்க்கு பிரேமலதா கோரிக்கை



சென்னை, மே.26-
பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விஜய் தலைமையிலான அரசு இரும்புக்கரம் கொண்டு குற்றவாளிகளை அடக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயதுடைய முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேபோல் அந்தோணி ராஜ் என்கிற விவசாயி தற்கொலை செய்து கொண்ட சம்பவமும், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே குபேந்திரன் என்கிற 17 வயது சிறுவன் முன் விரோதம் காரணமாக நள்ளிரவில் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவமும் மக்களிடையே அச்சத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும் சென்னை ராயபுரத்தில் உள்ள ஆர்.எஸ்.ஆர்.எம் அரசு மருத்துவமனையில் பிறந்து 9 நாட்களே ஆன குழந்தை கடத்தப்பட்ட சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சிகளை பார்த்தாலே கொலை, கொள்ளை, பாலியல் வன் கொடுமை, குழந்தைகள் மீதான குற்றங்கள் போன்ற செய்திகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருப்பது தமிழகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை குறித்து மக்கள் மத்தியில் கடும் கவலையை உருவாக்கியுள்ளது.

"சிறு குழந்தைகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்துள்ளேன்" என்று பெருமையோடு கூறும் முதல்வர் விஜய், பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சட்டம் மற்றும் ஒழுங்கு, காவல்துறை நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு இரும்புக்கரம் கொண்டு குற்றவாளிகளை அடக்க வேண்டும் என தேமுதிக சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இல்லை என்றால், "கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்" செய்தால் பயனில்லை." என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.



## "மேகேதாட்டு திட்டத்தை தமிழக காங்கிரஸ் தலையிட்டு தடுத்து நிறுத்தும்" கனிமொழி நம்பிக்கை

சென்னை, மே.26-
"தவெகவின் அமைச்சரவையில் காங்கிரஸ் அமைச்சர்கள் பங்குகொண்டிருக்கும் நிலையில், காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலையிட்டு உடனடியாக மேகேதாட்டு திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன்" என திமுக எம்.பி கனிமொழி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "காவிரியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டப்படும் என கர்நாடக அரசு அறிவித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது. மேற்கு மண்டலத்தில் தொடங்கி தஞ்சை டெல்டா வரை தமிழ்நாட்டில் பாதியை பாலைவனமாக்கத் துடிக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் திட்டத்தை, திமுக ஆட்சியிலிருந்த வரை தடுத்து நிறுத்தியது.

தற்போது, தவெகவின் அமைச்சரவையில் காங்கிரஸ் அமைச்சர்கள் பங்குகொண்டிருக்கும் நிலையில், காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலையிட்டு உடனடியாக அத்திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

காவிரி நடுமன்ற தீர்ப்பிற்கு எதிராக கர்நாடக அரசு, மேகதாதுவில் அணை கட்டுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மேகதாது அணை பிரச்சினை தொடர்பாக கடந்த ஆட்சி காலத்தில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவையும் உச்ச நீதிமன்றம் 24.05.2026 (நேற்று) தள்ளுபடி செய்துள்ளது.

இந்நிலையில், "காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலையிட்டு உடனடியாக மேகேதாட்டு திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன்" என திமுக எம்.பி கனிமொழி தெரிவித்தார்.

## ஓமலூர் அருகே சுரங்கப்பாதையில் தேங்கிய மழைநீரில் சிக்கிய கார்: கணவன், மனைவி உயிரிழப்பு



சேலம், மே.26-
ஓமலூர் அருகே செம்மாண்டப்பட்டி ரயில்வே சுரங்கப்பாதையில் தேங்கிய மழைநீரில் கார் சிக்கியதில், அதில் பயணம் செய்த தம்பதியினர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள செம்மாண்டப்பட்டி ரயில்வே சுரங்க பாதையில் சேலம், சின்னதிருப்பதியை சேர்ந்தவர்கள் வெங்கடாசலம், ராதா தம்பதியினர். இவர்களுக்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர். அரசு போக்குவரத்து கழகத்தில் மேலாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற இவரின் மகன் அமெரிக்காவிலும், மகள் கோவையிலும் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், கணவன் மனைவி மட்டும் சேலம் சின்னதிருப்பதி இல்லத்தில் வாழ்ந்து வந்தனர்.

நேற்று இரவு முதல் ஓமலூர் வட்டாரத்தில் கனத்த மழை பெய்தது. இந்த மழைநீர் ஓமலூர் அருகே செம்மாண்டப்பட்டி, ஏனாதி கிராமத்தில் வழியாக செல்லும் ரயில்வே சுரங்கபாதையில் ஆறு போல தேங்கியது. இந்த நிலையில், இன்று ஓமலூர் சின்னதிருப்பதியில் நடைபெறும் உறவினர் இல்ல திருமணத்திற்காக வெங்கடாசலமும், அவரது மனைவி ராதாவும், அதிகாலை 5 மணியளவில் காரில் வந்துள்ளனர்.

அப்போது ஏனாதி செம்மாண்டப்பட்டி ரயில்வே பாலத்தில் தேங்கியுள்ள மழைநீரில் காரை விட்டுள்ளனர். கார் லாக் ஆகி இருந்ததால், குளம்போல தேங்கியுள்ள நீரில் மழைநீரில் கார் முழுமையாக மூழ்கியது. வயதானவர்கள் என்பதால் உடனடியாக அவர்களால் வெளியே வர முடியாமல் காருடன் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். காலையில் அந்த வழியாக சென்ற கிராம மக்கள் பார்த்து ஓமலூர் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

விரைந்து வந்த போலீஸார் இருவரின் உடல்களையும் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், நீரில் மூழ்கி கணவன் மனைவி உயிரிழந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே தொடரும் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வு காணவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தவெகவினர் அதிகார வெறியாட்டம் பற்றி முதல்வர் விஜய் பேசுவாரா? இபிஎஸ் கேள்வி



சென்னை, மே.26-
"முதல்வர் கோட்டைக்கு வருகிறார், கேரியரில் மதிய உணவு சாப்பிடுகிறார். ஆஹா என்ன ஒரு மாற்றம் என்று ஒரு தனி உலகத்தை இவர்கள் கட்டமைக்கும் வேளையில், தமிழ்நாடு ரத்தக்காடாக மாறி வருவது பற்றியும், தங்கள் கட்சியினர் பொறுப்புணர்வின்றி போடும் அதிகார வெறியாட்டம் பற்றியும் ஒருவார்த்தையாவது பேசுவார்களா?" என தமிழக முதல்வர் விஜய்க்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மதுரை கீழமாத்தூரில் 10ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த தவெக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகே 17 வயது சிறுவன் வெட்டிப் படுகொலை செய்யப் பட்டதாகவும் வரும் செய்திகளே அதிர்ச்சி அளிக்கின்றன.

மேலும், தாம்பரம் அருகே கல்லூரி மாணவியை தவறான முறையில் பார்த்த தவெக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், திருவொற்றியூரில் நள்ளிரவில் மின்துறை உதவிப் பொறியாளர் வீட்டின் கதவைத் தட்டி அச்சுறுத்தி ஆளும் தவெகவினர் மிரட்டியதாகவும் செய்திகள் வருகின்றன.

மேலும் சேலம் மாவட்டம் ஓமலூரில் நேற்று மழை பெய்த நிலையில் பல இடங்களில் மழைநீர் சூழ்ந்திருந்தது. இன்று காலை ஓமலூரில் உள்ள ரயில்வே சுரங்கப் பாதையை காரில் கடக்க முயன்ற கணவன் மனைவி இருவரும் அங்கு தேங்கியிருந்த தண்ணீரில் மூழ்கி இறந்துள்ளதாக வரும் செய்திகள் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ரயில்வே சுரங்கப் பாதையில் தேங்கிய மழைநீரை இந்த அரசு உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளாததால் இன்று நாம் இரண்டு விலைமதிப்பற்ற உயிர்களை இழந்துள்ளோம்.

சிறப்பான ஆட்சியை தருவேன், மாற்றம் கொண்டு வருவேன் என்று முதல்வர் வசனம் பேசினார். ஆனால் ஒவ்வொரு நாளும் விலை மதிப்பற்ற உயிர்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். இந்த பொய்க்கால் குதிரை ஆட்சியிலும் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. ஆளுங்கட்சி நிர்வாகிகளுக்கு மதுரை சம்பவத்தில் தொடர்பு இருப்பதாக செய்திகள் வருகின்றன. அதுபோக, ஆளுங்கட்சியினரின் மிரட்டல் அராஜகங்கள், குறிப்பாக அரசு ஊழியர்களை அச்சுறுத்தும் போக்கு என்பது தொடர்கிறது.

முந்தைய ஆட்சிபோல் தமிழகத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல், செய்தியாளர் சந்திப்பு நடத்த முடியாத முதல்வர் தான் இப்போதும் வாய்த்துள்ளார். ட்விட்டர் மடைமாற்று அரசியலில் திமுக ஈடுபட்டது என்றால், இன்ஸ்டாகிராம் ரீல் மடைமாற்று அரசியலில் இன்றைய ஆளுங்கட்சி ஈடுபடுகிறது. அவ்வளவு தான்.

முதல்வர் கோட்டைக்கு வருகிறார்! கேரியில் மதிய உணவு சாப்பிடுகிறார்! ஆஹா என்ன ஒரு மாற்றம்?" என்று ஒரு தனி உலகத்தை இவர்கள் கட்டமைக்கும் வேளையில், தமிழ்நாடு ரத்தக்காடாக மாறி வருவது பற்றியும், தங்கள் கட்சியினர் பொறுப்புணர்வின்றி போடும் அதிகார வெறியாட்டம் பற்றியும் ஒருவார்த்தையாவது பேசுவார்களா?

உங்களுக்கு வாக்களித்த தமிழக மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை இருந்தால், அவர்களை காப்பாற்ற சட்டம் ஒழுங்கை சீர்செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள் என்று இந்த முதல்வரை வலியுறுத்துகிறேன்" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## திமுக அதிமுக கூட்டணிக்கு பாஜக உதவியதா? மாணிக்கம் தாகூரை சாடிய தமிழிசை



தூத்துக்குடி, மே.26-
"திமுகவும், அதிமுகவும் இணைந்து பதவிக்கு வர பாஜக உதவி செய்ததாகக் கூறிய மாணிக்கம் தாகூரை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் தொடர்கதையாகி வருவது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. பரிதவித்துக் கொல்லப்பட்ட செய்தியை சொல்லும்போது ஒரு காவல்துறை அதிகாரி சிரித்துக் கொண்டிருக்கிறார்; ஒரு அமைச்சர் சிரித்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் என்ன உணர்வோடு இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

அதனால் புதிய அரசாங்கம் இன்னும் அதிக விழிப்புணர்வோடு, எச்சரிக்கையோடு, மக்களுக்கு அதிக பாதுகாப்பு தரும் உணர்வோடு செயல்பட வேண்டும்.

மாணிக்கம் தாகூருக்கு எனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு இருக்கும் பதவி ஆசையால் பின் வாசல் வழியாக ஓடிப் போய் பதவியில் ஒட்டிக் கொண்டீர்கள் என்பதை ஒப்புக்கொள் ளுங்கள். காங்கிரஸ் தனித்து நின்று வெற்றி பெற்று அமைச்சரவை என்பது உலகம் இருக்கும் வரையிலும் வாய்ப்பில்லை. திமுக மற்றும் மற்ற கட்சிகளின் தோளில் ஏறி வெற்றி பெற்றுவிட்டு, அதிமுகவும் திமுகவும் இணைந்து பதவிக்கு வர பாஜக உதவி செய்ததாக சொன்னதை வன்மையாகக் கண்டிக்கிறேன். முன்னர், பாஜக அரசு ஒரு வருடத்தில் கவிழும் என ராகுல் காந்தி பேசியிருக்கிறார். ஆனால் மீண்டும் மீண்டும் பிரதமராக மோடி தான் தேர்ந்தெடுக்கப்படுவார்.

தவெக அமைச்சரவையில் பங்கு பெற்றது எனக்கே பிடிக்கவில்லை என திருமாவளவனே சொல்கிறார். ஆட்சி அதிகாரத்தில் ஆசை இல்லையென்றால் வெளியில் இருந்து ஆதரவு கொடுத்திருக்கலாம். அமைச்சர் ஆகிவிட்டு, நாங்கள் இந்தக் கூட்டணியில் இருக்கிறோமா அல்லது அந்தக் கூட்டணியில் இருக்கிறோமா என எங்களுக்கே தெரியவில்லை என சொல்கிறார்கள்.

மக்கள் தவெகவுக்கு அறுதிப் பெரும்பான்மை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த அரசாங்கம் தினமும் ஆட்டம் காணும் அரசாங்கமாக இருக்குமோ எனத் தோன்றுகிறது" என்றார்.



■ ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற "மக்கள் குறைதீர்க்கும் நாள்" கூட்டத்தின் போது, வருகை தந்திருந்த மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர், அவர்களின் குறைகளைக் கனிவோடு கேட்டறிந்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# மின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய புதிய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, மே.26-

மின்னுற்பத்தியில் தன்னிறைவு அடைய கடந்த திமுக ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, புதிய அரசு இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கடந்த சில நாட்களாக அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது.

இதனால், மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மின்வெட்டுக்கான காரணங்கள் குறித்து அரசுத் தரப்பில் கூறப்படும் காரணங்களை ஏற்க முடியாது.

தமிழகத்தின் மொத்த மின்தேவை 22 ஆயிரம் மெகாவாட்டாக உயர்ந்துள்ள நிலையில், 84 சதவீத மின்சார தேவைக்காக மத்திய அரசு மற்றும் தனியார் மின்நிலையங்களையே தமிழகம் சார்ந்துள்ளது.

சொந்த மின்னுற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்ய ஆகும் செலவை விட, பல மடங்கு அதிக விலை கொடுத்து தனியாரிடம் மின்சாரம் வாங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டம் அடைவதற்கும், மின்வாரியத்தின் மொத்த கடன் ரூ.2.50 லட்சம் கோடியை தாண்டியதற்கும் இதுவே முதன்மைக் காரணம்.

திமுக ஆட்சி கடந்த 2021ம் ஆண்டு பொறுப்பேற்றபோது, மொத்தம் 5,700 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் திட்டங்களை அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் இருந்தன. திமுக அரசு நினைத்திருந்தால், அனைத்து மின் திட்டப் பணிகளையும் நிறைவேற்றி முடித்து, உற்பத்தியை தொடங்கியிருக்க முடியும்.

ஆனால், அதிமுக ஆட்சியில் 90 சதவீத பணிகள் முடிவடைந்திருந்த வடசென்னை 3வது அனல் மின்நிலையத்தில் (800 மெகாவாட்) மட்டும்தான் கடந்த பிப்ரவரி மார்ச் மாதத்தில் வணிகரீதியான மின்னுற்பத்தியை தொடங்கியது.

மீதமுள்ள 4,900 மெகாவாட் திறன் கொண்ட மின்னுற்பத்தி நிலையப் பணிகள் இதுவரை முடியவில்லை. தமிழகத்தில் தொழில், பொருளாதார வளர்ச்சி எட்டப்பட வேண்டும் என்றால், மின்னுற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும்.

கடந்த ஆட்சியில் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதநிலையில், புதிய அரசு இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அனல் மின் திட்டங்களின் தற்போதைய நிலை என்ன. அவை எப்போது உற்பத்தியை தொடங்கும்.

புதிதாக என்னென்ன மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. கார்பன் சமநிலையை அடைவதற்காக தமிழகத்தில் எப்போது அனல் மின் உற்பத்தியை முடிவுக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பன உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# அரசு மருத்துவமனைகளில் மருத்துவர், செவிலியர் பணியிடங்களை அதிகரிக்க வேண்டும்: அமைச்சரை சந்தித்து மருத்துவர்கள் மனு

சென்னை, மே.26-

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர், செவிலியர் பணியிடங்களை அதிகரிக்க வேண்டும் என்று, சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜை சந்தித்து அரசு மருத்துவர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.

சென்னை, தலைமை செயலகத்தில், தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜை அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு தலைவர் மருத்துவர் எஸ்.பெருமாள் பிள்ளை தலைமையில், அரசு மருத்துவர்கள் சந்தித்து பேசினர். அப்போது, சுகாதாரத்துறை தொடர்பான கோரிக்கை மனு ஒன்றை அமைச்சரிடம் வழங்கினர்.

அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது: சுகாதாரத் துறையில் தமிழகம் முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. சுகாதாரக் குறியீடுகளான மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத்து வருகின்றோம்.

இருப்பினும், தமிழகத்துக்கு பெருமை சேர்த்து வரும் அரசு மருத்துவர்களுக்கு, நாட்டிலேயே குறைவான ஊதியம் தந்து அவமானப்படுத்தி வருவது வேதனையளிக்கிறது. இந்த கோரிக்கைக்காக கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகிறோம்.

அதுவும், சுதந்திர இந்தியாவில் அரசு மருத்துவர்களை தங்கள் ஊதியத்துக்காக தொடர்ந்து போராட வைக்கும் ஒரே மாநிலமாக தமிழகம் உள்ளது. அதனால், அரசு மருத்துவர்களுக்கு அரசாணை 354ன்படி ஊதியம் வழங்க வேண்டும். கரோனா பேரிடரில் பணியாற்றி உயிரிழந்த அரசு மருத்துவர் விவேகானந்தன் மனைவிக்கு அரசு வேலைக்கான ஆணை வழங்க வேண்டும்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் 400 பல் மருத்துவர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும்.

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை 3 மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக மருத்துவர், செவிலியர் பணியிடங்களை அதிகரிக்கப்படாததால், மருத்துவர் மட்டுமன்றி, மக்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

அதனால், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர், செவிலியர் பணியிடங்களை அதிகரிக்க வேண்டும். அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பல் மருத்துவர் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

கடந்த திமுக ஆட்சியில் அரசு மருத்துவர்களின் கோரிக்கையை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லும் வகையில், பாதயாத்திரையை முன்னெடுத்து சென்ற மருத்துவர் சங்க தலைவர் மருத்துவர் பெருமாள் பிள்ளைக்கு தரப்பட்ட 17பி குற்ற குறிப்பாணையை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பாலியல் குற்றங்களைத் தடுக்கும் விதமாக தண்டனைகள் இருக்க வேண்டும்" முதல்வர் விஜய் அறிவுறுத்தல்

சென்னை, மே.26-

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக, முறையாக நடத்தி, கடும் தண்டனை பெற்றுத் தருவது குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுவோரைத் தடுக்கும் விதமாக இருக்க வேண்டும் என்று அரசு ஆய்வுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் விஜய் தெரிவித்தார்.



தமிழக முதல்வர் விஜய் தலைமையில் இன்று (மே 25) தலைமைச் செயலகத்தில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் காவல் துறை, சமூக நலத் துறை மற்றும் அரசு தலைமை வழக்கறிஞருடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர முதல்வர் வலியுறுத்தினார். வழக்குகளை முறையாக நடத்தி, கடும் தண்டனை பெற்றுத் தருவது குற்றச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுவோரைத் தடுக்கும் விதமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் முனைவர் மு.சாய்குமார், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் மரியம் பல்லவி பல்தேவ், காவல் துறை தலைமை இயக்குநர் டாக்டர் சந்தீப் ராய் ரத்தோர், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) முனைவர் மஹேஷ்வர் தயாள், காவல் துறை கூடுதல் இயக்குநர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) அனிதா ஹுசைன், காவல் துறை தலைவர் (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்றத் தடுப்புப் பிரிவு) சி. ராஜேஸ்வரி, காவல் துறை தலைவர் (நுண்ணறிவு) ஆஸ்ரா கர்க், காவல் துறை தலைவர் (சிங்கப்பெண்) கே.பவானீஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதிரவைத்த கோவை சம்பவம்:

கோவை மாவட்டத்தில் வசித்து வந்த தம்பதியின் 10 வயது மகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், போக்குவரத்து அமைச்சர் பார்த்திபன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைஅமைச்சர் சம்பத்குமார் சேலம் மாவட்டத்தில் நேற்று சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறினர். போக்சோ நீதிமன்ற உத்தரவின்பேரில், தமிழக அரசு சார்பில் ரூ.7 லட்சத்துக்கான காசோலையை வழங்கினர்.

இந்தச் சம்பவத்துக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்தன. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான திமுக கடும் கண்டனங்களை பதிவு செய்தது.

இன்று காலையில்கூட திமுக எம்.பி. கனிமொழி, "குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் என யாருக்கும் பாதுப்பில்லாத மாநிலமாகிவிட்டது தமிழ்நாடு. சட்டம் ஒழுங்கு கடுமையாக சீர்குலைந்துள்ளதை, இந்த புதிய அரசு அறிந்துள்ளதா என்பதே சந்தேகமாகவுள்ளது" என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும், காவல் துறை, சமூகநலத் துறை மற்றும் அரசு தலைமை வழக்கறிஞருடன் முதல்வர் விஜய் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.



# சென்னை: பாஸ்போர்ட் சேவை அலுவலகத்தில் பழங்குடியினர் தயாரிப்பு விற்பனை மையம் திறப்பு

சென்னை, மே.26-

சென்னை பாஸ்போர்ட் சேவை மையத்தில், பழங்குடியினர் தயாரிப்பு பொருட்களின் விற்பனை மையம் திறக்கப்பட்டுள்ளது. சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில், மக்கள் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில், பல்வேறு சமூக முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக, சென்னை, சாலிகிராமத்தில் உள்ள பாஸ்போர்ட் சேவை மைய அலுவலகத்தில், பழங்குடியினர் கூட்டுறவு சந்தை மேம்பாட்டுக் கூட்டமைப்பு சார்பில், பழங்குடியினர் உற்பத்தி பொருட்களின் விற்பனை மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை மையத்தில் கைவினைப் பொருட்கள், கைத்தறி பொருட்கள், இயற்கை உணவுப் பொருட்கள் மற்றும் காட்டு வளப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதன்மூலம், பழங்குடியினர் சமூகங்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதுடன், அவர்களின் தயாரிப்புகளுக்கு நேரடி விற்பனை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில், இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ராஜா முருகன், சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலர் எஸ்.விஜயகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

# முதல்வராக விஜய் பதவியேற்ற 13 நாட்களில் 30க்கும் மேற்பட்ட குற்றச்சம்பவங்கள்: நயினார் நாகேந்திரன் விமர்சனம்

சென்னை, மே.26-

முதல்வராக விஜய் பதவி ஏற்ற 13 நாட்களில் தமிழகத்தில் 30க்கும் மேற்பட்ட குற்றச்சம்பவங்கள் நடந்துள்ளதாக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.



இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் அவர் கூறியிருப்பதாவது: தூயசக்தியா அல்லது தூங்கும் சக்தியா? திமுக எனும் தீயசக்திக்கு மாற்றான தூயசக்தி நாங்கள் தான் என்று கூறிய விஜய் தமிழகத்தின் முதல்வராக பதவியேற்ற 13 நாட்களில் கொலை, பாலியல் குற்றம், கடத்தல், ரவுடியிசம், வன்முறை என கிட்டதட்ட 30க்கும் அதிகமான குற்றங்கள் நடந்துள்ளதை தினசரி செய்தித்தாள்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

முந்தைய திமுக ஆட்சியில் தான் மக்கள் உயிர் பயத்துடன் ஒவ்வொரு நாளையும் கழித்தார்கள் என்று பார்த்தால், தற்போதைய தவெக ஆட்சியிலும் மக்களின் பாதுகாப்பு அந்தரத்தில்தான் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.


அதுசரி, திருடன் கையில் சாவி கொடுத்ததைப் போல, குற்றவாளிகளை எல்லாம் அமைச்சர் பதவியில் அமர்த்தினால் குற்றங்கள் எப்படி குறையும்? அரசைக் கண்டு குற்றவாளிகளுக்கு எப்படி பயமிருக்கும்? ஆட்சிக்கு வந்தவுடன் மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை சரிசெய்து, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதை விட்டுவிட்டு, வித விதமான விளம்பரப் பரப்புரைகளிலேயே முதல்வர் கவனம் செலுத்திக் கொண்டிருப்பது அவரது அனுபவமற்ற ஆளுமையைத்தான் காட்டுகிறது.

அலுவல் பணிகளுக்கு வேண்டுமானால் கொஞ்ச காலம் அவகாசம் கோரலாம். ஆனால் சட்டம் ஒழுங்கு போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு அவசரகதியில் துடிப்புடன் செயல்பட வேண்டும் என்பதை முதல்வர் எப்போது தான் உணர்வார்? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# சென்னை மணலி புதுநகர் அருகே தனியார் கிடங்கில் தீ விபத்து!

சென்னை, மே.26-

சென்னை மணலி புதுநகர் அருகே தனியார் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. எண்ணெய் பொருட்கள் சேமித்து



வைக்கப்பட்டிருந்த கிடங்கில் தீ. 4 மணி நேரத்திற்கும் மேலாக பற்றி எரியும் தீ. தீயை அணைக்க தீயணைப்புத் துறை வீரர்கள் முயற்சித்து வருகின்றனர்.

# "எங்களை தாக்க நினைத்தால் தாக்குங்கள்; வாக்களித்த மக்களை தாக்காதீர்கள்" திமுகவுக்கு கிரிஷ் சோடங்கர் பதிலடி

சென்னை, மே.26-

"எங்களை நீங்கள் தாக்க நினைத்தால் தாராளமாகத் தாக்குங்கள், ஆனால் வாக்களித்த தமிழக மக்களைத் தாக்காதீர்கள்'' என திமுக வினருக்கு தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் பதிலடி கொடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது: "எங்களை நீங்கள் தாக்க நினைத்தால் தாராளமாகத் தாக்குங்கள், ஆனால் வாக்களித்த தமிழக மக்களைத் தாக்காதீர்கள். எங்களை விமர்சிக்க ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் உரிமை உண்டு. அதற்காக நாங்கள் ஒருபோதும் ஆத்திரப்பட மாட்டோம்.

ஆனால் தமிழக மக்கள் வழங்கிய ஜனநாயகத் தீர்ப்பை யாரும் கேள்வி கேட்கவோ அவமதிக்கவோ கூடாது. தமிழக மக்கள் அரசியல் முதிர்ச்சி உடையவர்கள்; அவர்கள் புத்திக் கூர்மையுடனும் தெளிவுடனும் வாக்களிப்பவர்கள். எங்களது தலைவர்கள் அல்லது எங்களது கட்சிக்கு எதிரான தனிப்பட்ட விமர்சனங்களுக்கு பதிலளிக்கக் கூடாது என்று நாங்கள் விழிப்புணர்வுடன் முடிவு செய்தோம்.

நாங்கள் நினைத்திருந்தால், ஒரு தசாப்த காலமாக முக்கிய அமைச்சரவை பதவிகளையும் அதிகாரத்தையும் அனுபவித்துவிட்டு, 2014 மக்களவைத் தேர்தலில் இழைக்கப்பட்ட மாபெரும் துரோகத்தை அனைவருக்கும் நினைவூட்டியிருக்க முடியும். ஆனால் நாங்கள் அதைச் செய்யவில்லை.

தமிழக வரலாற்றில் அவர்கள் (திமுக) ஒருபோதும் மீண்டும் ஆட்சியைப் பிடித்ததில்லை (தொடர்ந்து இரண்டாவது முறை ஆட்சி அமைத்ததில்லை) என்பதை நன்றாக அறிந்திருந்தும், எங்களுக்கு வெற்றி வாய்ப்புகள் இருந்தபோதிலும் அந்த கூட்டணியில் இணைந்தோம். மக்களின் தீர்ப்பை பணிவுடனும் பெருந்தன்மையுடனும் மதிப்பதே எங்கள் கோட்பாடு'' எனத் தெரிவித்துள்ளார்.

புதிய மாற்றத்தை விரும்பினர்

இதே போல் கிருஷ்ணகிரி முன்னாள் எம்பி செல்லகுமார், "அவர்கள் தரம் தாழ்ந்து போய்விட்டார்கள் என்பதற்காக காங்கிரஸ் தரம் தாழ்ந்து போய்விட முடியாது. ஒவ்வொருவரும் தங்களுடைய ஆழ்மனதில் என்ன இருக்கிறதோ அதைத்தான் வார்த்தைகளாக வெளிப்படுத்துவார்கள். ஆகவே தரம் தாழ்ந்து பேசும் மனிதர்களுக்கு காங்கிரஸ் கட்சி ஒருபோதும் முக்கியத்துவம் கொடுத்தது இல்லை. மக்கள் மாற்றத்தை வேண்டும் என வாக்களித்திருக்கிறார்கள். அதிகாரத்தில் இருந்தவர்கள் செய்த தவறுகள், அரசியல்வாதிகளின் அராஜகம் ஆகியவற்றைக் கண்டித்து புதிய மாற்றத்துக்காக மக்கள் விரும்பினார்கள்.

யாராக இருந்தாலும் இதை ஜனநாயக ரீதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் அரசியல் இயக்கத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டு. திமுக ஆட்சி மீதான அதிருப்திதான் காங்கிரஸ் வேட்பாளர்கள் தோல்வியடையக் காரணமாக இருந்தது. அந்த ஆட்சி மீது இருந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள்தான் மக்கள் கொந்தளித்து வருவதற்கு காரணமாக இருந்தது.

ஆனால் பாஜக எந்த விதத்திலும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகவே திமுகவுடன் தேர்தல் கூட்டணி வைத்தோம். அதனால் அதிகாரத்தில் எங்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை. அனிதா ராதாகிருஷ்ணன் எந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருந்தார். நாளைக்கு அவர் காங்கிரஸில் வந்து ஐக்கியமானால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல தலைவர்களும் திமுக இளைஞரணி நிர்வாகிகள் கூட்டத்தில் காங்கிரஸைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் திமுக தலைவர்களின் கருத்துகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.



# தக்கலை மாஸ்டர் கியோசி டி.ராஜு தலைமையில் அதிரடி கராத்தே தகுதித் தேர்வு மற்றும் சிறப்புப் பயிற்சி

திசையன்விளை மே.26-

நெல்லை மாவட்டம் திசையன்விளை அய்யாதுரை ஆசான் கராத்தே பள்ளியின் சார்பாக, கடந்த 23ஆம் தேதி கராத்தே வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான சிறப்புப் பயிற்சி மற்றும் பெல்ட் தகுதித் தேர்வு நடைபெற்றது. இந்த முகாமில், தக்கலை கராத்தே கலை மாஸ்டர் கியோசி T. ராஜு மற்றும் அவரது சக மாஸ்டர்கள் கலந்துகொண்டு வீரர்களுக்கு அதிரடிப் பயிற்சிகளை வழங்கித் தேர்வுகளை நடத்தினர்.

திசையன்விளை காங்கிரஸ் பிரமுகரும், அய்யாதுரை ஆசான் சிலம்பப் பள்ளியின் தலைவருமான விவேக் முருகன் தலைமையில் இந்த சிறப்பான நிகழ்வு நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற விழாவில், தேர்வுகளில் பங்கேற்றுத் தங்களது திறமைகளை நிரூபித்துத் தேர்ச்சி பெற்ற கராத்தே வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வண்ணப் பெல்ட்டுகளும், சான்றிதழ்களும் வழங்கி ஆசி வழங்கப்பட்டது. இதில் சண்முகபுரம் பக்குள்துரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சாதனை படைத்த மாணவமாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். நிகழ்ச்சியின் நிறைவாக, அய்யாதுரை ஆசான் சிலம்புப் பள்ளியின் பொருளாளர் J. தினேஷ் கண்ணன் வந்திருந்த அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார்.



■ மின்சாரம் தாக்கி வாலிபர் பலி.3 பேர் படுகாயம்.திருமண மண்டபத்தில் துயரம்.திருவண்ணாமலை தண்டாரம்பட்டு செல்லும் சாலையில் உள்ள மாதவி பன்னீர்செல்வம் திருமண மஹாலில் திருமண விழாவிற்காக அலங்காரம் செய்யும் பணி 24/5/26 அன்று நடைபெற்றது. அப்போது பெரிய ஏணியை தள்ளிக்கொண்டு சென்ற போது உயரே சென்ற மின் லைனில் ஏணி பட்டதில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சந்துபேரா (வயது 27) என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். சையன் சமந்தா,ராதாகான்,அபிஜித் ஆகிய வட மாநில தொழிலாளர்கள் 3 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# சங்கரன்கோவிலில் பொதுமக்களுக்கு தர்பூசணி, நீர்மோர் வழங்கித் தாகம் தீர்த்த தவெக!

சங்கரன்கோவில், மே.26-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் என்.ஜி.ஓ காலனி பேருந்து நிறுத்தம் அருகே, சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கோடைகால நீர்மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்குத் தவெக ஒன்றியச் செயலாளர் கனகராஜ் தலைமை வகித்தார். நகரச் செயலாளர் சரவணன், ஒன்றியத் துணைச் செயலாளர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி வடக்கு மாவட்ட தவெக செயலாளர் மாரியப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, புதிய நீர்மோர் பந்தலைத் திறந்து வைத்துப் பொதுமக்களுக்குக் குளிர்ச்சியான நீர்மோர் மற்றும் தர்பூசணிப் பழங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் மேல நீலிதநல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் சதீஷ்குமார், நகர இணைச் செயலாளர் உமா மகேஸ்வரன், வழக்கறிஞர் மாரியப்பன், மண்டல தகவல் தொழில்நுட்ப அணி இணை அமைப்பாளர் ரவிச்சந்திரன், காசிராஜன் உள்ளிட்ட ஏராளமான தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள ஏனாதி காலனி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ரயில்வே தரைப் பாலத்தில் மழை நீர் தேங்கி இருந்த நிலையில், அந்த வழியாகச் சென்ற கார் மழை நீரில் சிக்கி மாட்டிக்கொண்டது. இதில் காரில் பயணம் செய்த சேலம் சின்ன திருப்பதி பகுதியைச் சேர்ந்த வெங்கடாஜலம் அவரது மனைவி ராதா ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியாகி உள்ளனர். உறவினரின் நிச்சயதார்த்த நிகழ்ச்சிக்கு சென்று விட்டு வீடு திரும்பி போது விபத்து ஏற்பட்டுள்ளது இதனை அடுத்து இருவரின் சடலத்தையும் கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி உள்ளனர்.



# ஆடம்பரம் வேண்டாம், அறமே முக்கியம்! திருமண நன்னாளிலும் ஏழை எளியோருக்குக் கரம் கொடுத்து அசத்திய தம்பதி

தென்காசி, மே.26-


தென்காசி மாவட்டம் புளியங்குடி கெங்கா பரமேஸ்வரி அம்மன் கோவில் வளாகத்தில், மணமக்கள் காளிராஜ் பிரியா ராம் ஆகியோரின் திருமண விழாவை முன்னிட்டு, "உறவுகள் உதவும் அறக்கட்டளை" சார்பில் சமூகத்தில் நலிவடைந்த 100 ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசிப் பை, காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் வழங்கும் நெகிழ்ச்சியான நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விழாவிற்கு உறவுகள் உதவும் அறக்கட்டளையின் நிறுவனர் பெத்துராஜ் குட்டியான் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராகச் சிங்கப்பூர் காளிராஜ் (கடையநல்லூர்) கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கடையநல்லூர் ஸ்ரீ கிருஷ்ண ஐவராஜா கோவில் மற்றும் கங்கையா அறக்கட்டளையின் செயலாளர் ராஜகோபால், அறக்கட்டளை தன்னார்வலர் சங்கர்கோமதி, புளியங்குடி ஸ்ரீ கெங்கா பரமேஸ்வரி அம்மன் கோவில் செயலாளர் ராதாகிருஷ்ணன், பொன்னம்மாள் முதியோர் இல்லத்தின் நிறுவனர் மற்றும் சிந்தாமணி, சகாதேவன், சுமதி தர்மராஜ் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருமணத்தை ஆடம்பரமாகக் கொண்டாடாமல் எளிய மக்களுக்கு உதவும் வகையில் இந்த நற்பணியைச் செய்த மணமக்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த அறக்கட்டளை நிர்வாகிகளையும் பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.



■ தென்காசி மாவட்டம் தமிழக கேரள எல்லை புளியரை சோதனை சாவடியில் தமிழக கனிமவளத்துறை அமைச்சர் மருத்துவர். டி.கே. பிரபு நள்ளிரவில் திடீர் ஆய்வு. தமிழக கேரள எல்லைப் பகுதிகளில் கனிமவளங்கள் அதிக அளவில் கடத்தப்படுவதாக தகவல் வெளியாகி உள்ள நிலையில் இதுகுறித்து தமிழக கனிமவளத்துறை அமைச்சர் மருத்துவர் டி.கே.பிரபு நள்ளிரவில் தமிழக கேரள எல்லை சோதனை சாவடி அமைந்துள்ள புளியறையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த சோதனையின் போது ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்தார்.



# வெற்றிக்குப் பின் மக்களுக்கு நேரில் நன்றி கூறிய மடத்துக்குள எம்எல்ஏ இரா.ஜெயராமகிருஷ்ணன்!

மடத்துக்குளம், மே.26-

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டுப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற எம்.எல்.ஏ இரா. ஜெயராமகிருஷ்ணன், தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்த பொதுமக்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளருமான கே. ஈஸ்வரசாமி தலைமையில் இந்த நன்றி அறிவிப்புப் பயணம் தொகுதி முழுவதும் எழுச்சியுடன் நடைபெற்றது. எம்.எல்.ஏ இரா. ஜெயராமகிருஷ்ணன் வாக்காளர்களை நேரில் சந்தித்துத் தங்களின் ஆதரவிற்கு நெஞ்சார்ந்த நன்றிகளைச் சமர்ப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் திமுக கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் இ.கே. மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் ஈஸ்வரசாமி மற்றும் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், தொண்டர்கள் எனப் பலர் திரளாகக் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு நன்றி கூறினர்.



■ தென்காசி மாவட்டத்தின் 9வது மாவட்ட காவல் கண்காணிப்பாளராக எஸ். அசோக் குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# தென்காசி மாவட்டத்தில் பிரதமர் கிசான் திட்டத்தில் தவணைத் தொகை பெற விவசாயிகளுக்கு (ஜூன்) 15ந்தேதி வரை சிறப்பு முகாம்



தென்காசி, மே.26-

மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தகவல். பாரதப் பிரதமர் கிசான் திட்டத்தில் 4 மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2 ஆயிரம் வீதம் ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆனாலும் நில ஆவணங்கள் பதிவேற்றம் செய்யப்படாதது. ஆதார் எண் வங்கிக் கணக்குடன் இணைக்கப்டாதது மற்றும் இகே. ஒய்.சி. பதிவு செய்யப்படாதது போன்ற காரணங்களால் தவணைத் தொகை கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. பாரதப் பிரதமர் கிசான் திட்டத்தில் ஊக்கத்தொகை பெறும் விவசாயிகள் தனித்துவமான அடையாள எண் பெற்றால் மட்டுமே 23வது தவணைத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் தென்காசி மாவட்டத்தில் 4612 பேர் விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண் பெறாமல் உள்ளனர். தகுதியுடைய 1255 விவசாயிகள் ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைக்கவில்லை. 1437 விவசாயிகள் இகே.ஒய்.சி எனப்படும் கைரேகை பதிவு செய்யும் பணியை பூர்த்தி செய்யவில்லை. எனவே விவசாயிகள் இவை அனைத்தையும் சரி செய்தால் மட்டுமே அடுத்த தவணைத் தொகை விடுவிக்கப்படும். விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண். இகே. ஒய்.சி. ஆதார் எண்ணுடன் வங்கிக் கணக்கு எண் இணைத்தல் மற்றும் செல்போன் எண்ணை பிரதமர் கிசான் திட்டத்தில் இணைத்தல் போன்ற சேவைகளை சிறப்பு முகாமில் விவசாயிகள் பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.



# டாஸ்மாக் ஊழியர்களின் எதிர்காலம் என்ன? சேலம் மாவட்ட ஆட்சியர் வாயிலாக முதலமைச்சரின் கவனத்திற்குச் சென்ற மனு!

சேலம் மே.26-

தமிழ்நாடு முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் கல்விக் கூடங்கள் அருகே செயல்பட்டு வந்த 717 டாஸ்மாக் கடைகளைத் தமிழ்நாடு அரசு அண்மையில் மூடியது.

இதனைத் தொடர்ந்து, சேலம் மாவட்ட டாஸ்மாக் அனைத்து தொழிற்சங்கத்தினர் இணைந்து, மாவட்ட ஆட்சியர் வாயிலாகத் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு அடுக்கடுக்கான கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினை அளித்துள்ளனர்.

மாற்றுப் பணி: மூடப்பட்ட 717 மதுபானக் கடைகளில் பணிபுரிந்து வேலை இழந்த பணியாளர்கள் அனைவருக்கும், அரசின் பிற துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களில் உடனடியாகப் பணி அமர்த்த வேண்டும்.

கூடுதல் நேரம்: மதுபானக் கடைகளை இரவு 10 மணிக்கு மூட வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், அன்றாட விற்பனைக் கணக்குகளைச் சரிபார்த்து ஊழியர்கள் வெளியே செல்ல ஏதுவாகக் காவல்துறையினர் கூடுதலாக 1 மணி நேரம் (இரவு 11 மணி வரை) அனுமதி வழங்க வேண்டும்.

தனியார் முகமை: காலி மதுபாட்டில்களைத் திரும்பப் பெறும் திட்டத்தைத் தனியார் முகமை ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் செயல்படுத்த வேண்டும்.

டாஸ்மாக் ஊழியர்களின் வாழ்வாதாரத்தை முன்வைத்துச் சேலத்தில் எழுந்துள்ள இக்கோரிக்கைகள் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளன.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற "மக்கள் குறைதீர்க்கும் நாள்" கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, பொதுமக்களிடமிருந்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் அடிப்படை வசதிகள் கோரிய மனுக்களைப் பெற்றுக்கொண்டார். நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் க. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.





■ சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு. த. லோகேஷ்தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி, பத்திரப்பதிவுத் துறை மற்றும் அறநிலையங்கள்துறைச் செயலாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., வணிகவரி ஆணையர் திரு. எஸ். நாகராஜன், இ.ஆ.ப., பத்திரப்பதிவுத்துறை தலைவர் திரு. ஜி.கே. அருண்சுந்தர்தயாளன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., வருகை தந்திருந்த பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரில் பெற்றுக் கொண்டார். மேலும், அந்த மனுக்களின் மீது உரிய விசாரணை நடத்தி, தகுதியுடைய மனுக்களுக்கு விரைந்து தீர்வுகான சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000